1991 சனவரி 23]

(ஈ) இயக்கூர்திகள் (தனி வகைமுறைகள்) நீத்தறவு சட்ட முன்வடிவு, 1991

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1991ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனி வகைமுறைகள்) நீத்தறவுச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

9. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானம்— விவாதம்—தொடர்ச்சி

திரு. அ. கணேசமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது கருத்துக்களைத் தெரிவிக்கிற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு இந்த அவையிலே நடைபெற்றிருக்கிற, நடைபெறக் கூடாத சம்பவங்களுக்குப் பின்னாலே இந்த வாய்ப்பை முதலில் நான் பெற்றிருக்கிற காரணத்தினாலே என்னுடைய கருத்துக்கள் கூட தடைபடும் என்கிற அந்த உணர்வோடு என்னுடைய உரையை நான் துவக்குகிறேன்.

இந்த அரசு அமைந்து முதல் முறையாக கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வழிமொழிகிறபோது அதிலே உரையாற்றுகிற வாய்ப்பினை நான் பெற்றேன். அப்போதே நான் என்னுடைய உரையிலே இன்றைக்கு அமைந்திருக்கிற இந்த அரசு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கனவினை நனவாக்குகிற அரசாக அமைந்திடுமென்ற நம்பிக்கையினை நான் எடுத்து வைத்தேன். அன்றைக்கு 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்ற அந்த உணர்வைப் பெற்ற நம்முடைய முதல்வரவர்கள் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை அறிவித்து, நாட்டு மக்களுடைய